**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI**

| | | |
|---|---|---|
| Case Number | : | **S.C.No. 03/2023** |
| Deposition Of Witness for | : | PW 1 |
| Name | : | **பஞ்சவர்ணம்** |
| Husband / Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **June 2025.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>**

எனது சொந்த ஊர் பொத்தக்குடி கிராமமாகும். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு 2 பெண் குழந்தைகள், 2 ஆண் குழந்தைகள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள். சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக என் மகன் நாகராஜ் கோயம்புத்தூரிலிருந்து அவரது குழந்தையை பார்ப்பதற்காக என் ஊருக்கு வந்திருந்தார். 2வது எதிரி கொங்காத்தா என்பவரின் நகையை காணவில்லை என்று எனது மகனை திட்டினார்கள். என்னை எப்போதும் ஆஜர் எதிரிகள் திருட்டுப்பயலே என்று அடிக்கடி திட்டி வருவதாகவும், அதனால் நான் உயிருடன் இருப்பதைக்காட்டிலும் செத்துவிடுவது நல்லது என்று கூறிவந்தார். எனது மகன் நாகராஜை 1வது ஆஜர் எதிரி பெரியசாமி (எ) கட்டராசு என்பவர் பிராந்தியை வாங்கி கொடுத்து அவரது வீட்டிற்கு கூட்டிச்சென்றுவிட்டார். 1வது எதிரி கட்டராசுவின் அம்மா ஆண்டிச்சி என்பவர் என்னிடம் வந்து எனது மகன் நாகராஜன் குடித்துவிட்டு எங்களது வீட்டில் இருக்கிறார் என்று கூறி என்னை அவர்களது வீட்டிற்கு கூட்டிச் சென்றார். ஆண்டிச்சி வீடு பூட்டி இருந்த நிலையில் மேற்படி வீட்டை ஓட்டைப்பிரித்து எனது பேரன் அழகர் சாமி இறங்கினார். இறங்கி பார்த்தபோது எனது மகன் நாகராஜன் போர்வையை கழுத்தில் சுற்றி தூக்கில் தொங்கிய நிலையில் இருந்தார், இறக்கி பார்த்தபோது எனது மகன் இறந்துவிட்டார். அந்த சமயத்தில் வீரப்பன், முத்தையா, ஆகியோர்கள் இருந்தார்கள். நான் நடந்த சம்பவத்தைக் குறித்து காளையார்கோவில் காவல் நிலையத்தில் பெரியசாமி (எ) கட்டராசு, ஆண்டிச்சி, கொங்காத்தா ஆகியோர் மீது நான் தான் புகார் கொடுத்தேன், மேற்படி புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். மேற்படி புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகாரை எனது மகன் முருகன் படிக்க சொல்லி கேட்டு அதில் கைரேகை செய்தேன். என் மகன் இறப்பிற்கு காரணம் ஆஜர் எதிரிகள் தான். 3ம் எதிரி கோனமண்டை (எ) கொங்கு இறந்துவிட்டார். போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனது மகன் இறந்த மறுநாள் தான் காளையார்கோவில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காளையார்கோவிலை தாண்டி தான் சிவகங்கை

வரவேண்டும் அப்போது புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ-1 புகார் மனுவை எனது மகன் முருகன் தான் எழுதினார் என்றும், அதில் நான் கைரேகை வைத்தேன் என்றும் புகாரில் என்ன விபரம் உள்ளது என எனக்கு தெரியாது என்றால் நான் படிக்காத காரணத்தால் தெரியாது. எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். 2ம் எதிரிக்கு சொந்தமான எனது மகன் தூக்கில் தொங்கியதாக சொல்லும் வீடு 1 கி.மீ தொலைவில் இருக்குமா என்றால் இருக்கும். பொத்தக்குடியில் எதிரிகளுக்கு தனித்தனியாக வீடு உள்ளது என்றும், எதிரிகள் தனித்தனியாகத்தான் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். எனது மகன் நாகராஜனின் முதல் மனைவியான திராணி கிராமத்தைச் சேர்ந்த சாந்தி என்பவருடன் ஏற்பட்ட மணமுறிவானது நீதிமன்றத்தின் மூலம் ஏற்பட்டதா அல்லது கிராம பஞ்சாயத்து மூலம் ஏற்பட்டதா என்ற விபரம் எதுவும் எனது புகாரிலோ, வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் நான் படிக்காததால் அது பற்றி தெரியவில்லை. இறந்துபோன நாகராஜன் மதுபோதைக்கு அடிமையாகி கெட்ட பழக்கங்கள் கொண்டவர் என்பதால் மேற்படி சாந்தி அவராகவே பிரிந்து சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. இரண்டாவதாக உருலியைச் சேர்ந்த பஞ்சவர்ணம் என்பவரை நாகராஜன் திருமணம் செய்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன பஞ்சவர்ணமும் நாகராஜனின் மதுபழக்கத்தால் பிரிந்து சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பஞ்சவர்ணம் எனது மகன் நாகராஜனை விட்டு பிரிந்து சென்றுவிட்டதால் தான் அவரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் நகை திருடியதாகவும் அதனால் எதிரிகள் எனது மகனுடன் பேச்சுவார்த்தை எதுவும் வைத்துக்கொள்ளவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி கட்டராசுவுடன் எனது மகன் மது அருந்தியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. மனைவியை பிரிந்ததால் எனது மகன் நாகராஜனுக்கு முழுநேரம் குடிப்பது தான் தொழில் என்றால் சரியல்ல. 1ம் எதிரி வீட்டிற்கு மதுபோதையில் சென்ற எனது மகன் 1ம் எதிரியை அடித்தார் என்றும் அங்கிருந்த கருக்கு மட்டையில் எனது மகன் கீழே விழுந்து தலையில் அடிபட்டதால் இறந்துவிட்டார் என்றும், எனது மகனின் இறப்பிற்கு எதிரிகள் காரணமல்ல என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் எனது மகன் நாகராஜனை எந்தநேரத்திலும், திருட்டுப்பழி சொல்லி பேசவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் குழந்தை

இல்லாததாலும், மனைவிகள் அவரை விட்டு பிரிந்து சென்றதாலும் மன விரக்தி அடைந்து எதிரிகள் வீட்டிற்குச் சென்று தூக்கில் தொங்கிவிட்டார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.06.17 18:02:09 +0530